28th August 1970]

நம்முடைய அதிகாரிகள் அங்கே போய் அடிக்கடி தங்குகிறார்கள். எனவே கேரள எல்லையில் மதுக் கடைகள் இருக்கக்கூடாது என்று கேரள அரசுக்கு நம் மாநில அரசு எடுத்துக் கூறுவதில் தவறு ஏதுமில்லை. அப்படி எழுத நம் அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிச் சில மாநிலங்களுக்கு எழுதி அவர்களும் அதற்கான ஒப்புதலைத் தர மறுத்து வருகிறார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : தனியார் பஸ்ஸில் ஏற்பட்ட இந்த விபத்திற்காக அதில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு 82,000 ரூபாய் வரை கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி சர்க்கார் பஸ்ஸில் ஏற்படுகிற விபத்துகளில் யாராவது இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் ஏதாவது உதவித் தொகை கொடுத்திருக்கிறார்களா ? அப்படிக் கொடுக்க வேண்டும் என்பதற்கான திட்டமாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நிறையக் கொடுத்திருக்கிறோம். ஒரு கேசில் இறந்ததற்காக 80,000 ரூபாய் வரை கொடுத்திருக்கிறோம். அதற்கு அரசாங்கத்தில் விதிமுறை இருக்கிறது. விபத்து ஏற்பட்டால், அது அரசாங்கத் தொழிலாளர் தவறு காரணமாக ஏற்பட்டால், கண்டிப்பாக நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

Manufacture of Sugar from Neera

*39. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether any arrangement has been made for the manufacture of sugar from Neera, under the scheme of Rural Industrial Development ; and

(*b*) if so, in which districts they have been established ?

பதநீரிலிருந்து சர்க்கரை தயாரித்தல்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பதநீரிலிருந்து சர்க்கரை தயாரிக்க கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த மாவட்டங்களில், அத்தகைய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஆம்.

(இ) 1/3 டன் சர்க்கரை ஆலைகளை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களில் தொடங்குவதற்கான செயற்குறிப்பு உள்ளது.

[28th August 1970

திரு. வி. தங்கபாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் குறிப்பாக இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு, மிக அதிகமான பொருத்தமுள்ளதாக இருக்கும். அங்கேதான் ஏராள மான பனை மரங்கள், ஆயிரக்கணக்கான மரங்கள், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் எல்லாம் இருக்கிறார்கள். மேலும் அந்த மாவட்டங்கள் தொழில் வளம் இல்லாத நிலைமையில் இருக் கின்றன. எனவே இந்த மாவட்டங்களில் இந்தத் தொழிலைத் துவங்கு வதற்கு அரசாங்கம் முன்வருமா ? அதற்கான வேலைகளைத் தொடங்க அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : நெல்லை மாவட்டத்தில்தான் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்கான இயந்திரங்கள்கூட பம்பாய் கதர், கிராமக் கைத்தொழில் ஆணைக் குழுவிடமிருந்து பெறப்பட்டிருக்கின்றன. ஆனால் இதில் உள்ள சங் கடம் என்னவென்றால் இப்போதுள்ள கரும்பு-சர்க்கரை விலைக்கும் இந்தப் பனஞ்சர்க்கரை விலைக்குமிடையே நிறைய வித்தியாசம் இருக் கிறது. இந்த விலையேற்றத்தின் காரணமாக இந்தத் தொழிலில் மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை ஈடுகட்ட இந்தியக் கதர், கிராமக் கைத்தொழில் ஆணைக்குழு சப்சிடி — உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தோம். ஆனால் அந்தத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். ஆகவே இந்த விலைக்கு மிகுதியாக சர்க்கரை உற்பத்தி செய்யும் சந்தர்ப்பத்தில் பனஞ் சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைபற்றி மறு ஆய்வு செய்ய வேண்டிய நிலை உள்ளது. அது நஷ்டத்தில் செயல்பட வேண்டியிருக் கிறது என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது.

Eradication of begging

*40. *Q*.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether measures are now being adopted by the Government for the eradication of open begging in streets, bazaars and other public places ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) whether there is any proposal for taking new and more effective steps in this direction ?

பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தெருக்கள், கடைவீதிகள், மற்றும் பிற பொது இடங்களில் பிச்சையெடுப்பதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தற் போது மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இது குறித்து இன்னும் செம்மையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயல்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?